RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s241

# எட்டுத்தொகையில் சிறுதெய்வ இறைநெறிக் கோட்பாடுகள்

த. ஜெயபாரதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராணிமேரிக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை- 600004, தமிழ்நாடு, இந்தியா.

# The Theory of the Major Theological Principles of Eight Anthologies

T. Jeyabharathi [a, *]

[a] Department of Tamil, Queen Mary's College, Chennai-600004, Tamil Nadu, India

* Corresponding Author: jayabharathi26620@gmail.com

Received: 04-01-2021
Revised: 20-04-2021
Accepted: 24-04-2021
Published: 30-04-2021

Check for updates

## ABSTRACT

The creation of God is the belief that we will be safe by creating rituals and temples that are sacrificed by men who are afraid of the fury of nature. They also gave their hunting tools to the gods who created it and also established idolatry. Among the gods that were so, there is a dual ity of the small god. At first, the small deities were worshipped on the border of the village as a place where the dead ancestors lived as people. This is called the Guardian Goddess. The great deities are considered to be the deity of every deity shown in Thelly. The difference between the minor gods and the great gods does not appear to have been in the Sangam literature. However, it is a discretion to match the definition of today. In the society where the dead were usually the middle stones, the stones became worship. The study is the only small-sighted cult of the four temples that were built for the king, the deceased, the dead from the north, the life of the goddess, the king and the living.

**Keywords:** Worship, Hunting tools, Nature, Sangam literature.

## முன்னுரை

சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சேர்ந்து பதினெட்டு நூல்களும் என்பர். இவற்றை தொகை, பாட்டு என்றும் குறிப்பிடுவர். அத்தகைய சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களின் வழி சிறுதெய்வ வழிபாட்டு நெறிகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சிறுதெய்வம் பெருந்தெய்வம் என்ற இரண்டு இன்றைய அளவில்தான் காணப்படுகின்றது. சங்ககால சமூகத்தில் இவ்விரண்டும் வெவ்வாறானதாக கருதப்படவில்லை என்றே கூறலாம். இருப்பினும் ஊரினுள்ள கோயில் என்பதாகவும் எல்லையில் அமையப்பட்ட கோயிலாகவும் இதனை எடுத்துக்கொள்ளலாம். பொதுவாக சிறுதெய்வங்களாக உள்ளவைகள் அனைத்து எல்லா மனிதர்களைப் போலவும் வாழ்ந்த மறைந்த முன்னோர்களாகவும், போர் வீரர்களாகவும் இன்னும் பிறர்களாகவும் அறியப்படுகின்றது. இத்தகைய முன்னோர் வழிபாடுகள் யாவும் இறந்தவர் ஒருவரின் நினைவாக அவ்விடங்களில் வைக்கப்பட்ட கற்களை (நடுகற்களை) வணங்கும் முறை என்றே சொல்லலாம்.

## நடுகல் வணக்கம்

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலொன்று

இருமூன்று மரபிற் கல்லொடு புணர"

என்ற மேற்கண்ட வரிகள் நடுகல் பற்றி கூறுவது. அவற்றுள் ஆடவருக்குரிய வீரத்தினைப் போன்றுகின்ற ஒன்றாகவே நடுகல் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியத்திலும் நடுகல் ஆண்களுக்குரிய ஒன்றாகவே காட்டுகிறது. நடுகல் வணக்கம் என்பது தமிழரின் வீரத்தைப் பாராட்டும் முகமாகத்தான் தோன்றின. பின்னர் காலப்போக்கில் மனிதனின் பிற பண்புகளையும் பாராட்டும் தன்மை கொண்டதாக மாறியது என்றே கூறலாம் (Nagasamy, 1972; Maraimalaiadigal, 1965).

## சிறுதெய்வ உருவாக்கங்கள்

பொதுவாக இறைவனை மனிதன் படைத்தான் என்று நம்பப்பட்டாலும், ஆதிகால சமூகத்தில் மனிதனிடையே காணப்பட்ட அச்சங்களைப் போக்கவே பலவாறாக கடவுள்களை உருவாக்கினான். மேலும் தான் வேட்டைக்குப் பயன்படுத்திய ஆயுதங்கள் அனைத்தையும் கையில்களில் கொடுத்து அவ்வுருவ கடவுள் நம்மை காக்கும் என்று நம்பியிருக்கலாம். அதன் அடிப்படையில் உண்டான கடவுள்களில் சிறுதெய்வங்களாக இன்றைய நிலையில் ஊரின் எல்லையில் அமைந்திருக்கின்ற தெய்வங்கள் பெரும்பாலும் நடுகற் வழிபாட்டில் இருந்துதான் வந்ததாக அறியமுடிகின்றது. அதனை,

"அரும்புகழ் பாடி அமுதமுது நோனா(து)

இடும்பையுள் கைவி இருந்த கடும்பொடு

கைவன் குரிசில்கள் கைதொழு உச்செல்ப

தெய்வமாய் நின்றால் திசைக்கு"

என்ற மேற்கண்ட அடிகள் திசைகள் என்ற எல்லையில் சிறுதெய்வங்கள் எவ்வாறு கோயிலாக்கப்பட்டது என்பதை அறியமுடிகின்றது.

பொதுவாக வீரனுக்கு நடுகல் எடுப்பது வழக்கமாக இருந்திருக்கிறது என்றாலும் அகநானூறு 53ஆம் பாடல் போரில் மாய்ந்தவருக்கும், புறநானூற்றில் 261 ஆம் பாடல் ஆவினை மீட்டாருக்கும், புறநானூறு 65, 74, 215, 213 ஆம் பாடல் வடக்கிருத்தலும் அறியமுடிகின்றது. அவ்வாறு போரில் மாய்ந்தவருக்கும், வடக்கிருந்தவர்களுக்கும், பத்தினிப் பெண்டிருக்கும் பின்னாலில் கோயிலாக்கி வணங்கினர். அவற்றுடன் அரசனின் சமாதியையும் சேர்த்து கோயிலாக்கி வணங்கியதையும் பின்வருமாறு காணலாம்.

## போரில் இறந்தவர் சிறுதெய்வமாதல்

போரில் இறந்தவர்களுக்கு நடுகல் வைத்து போற்றுவது மரபாக இருந்துள்ளது. அத்தகைய நிகழ்வே பின்னாளில் ஒரு வழிபாடாக மாறியது. அதுவே சிறுதெய்வ அடையாளத்தை பெறுகின்றவாறு அவ்வழிபாடு அமைந்ததை,

"ஒருங்குநிலை வேங்கையொள்ளிரன் நறுவப்

போந்தையத் தோட்டிற் புனைந்தனர் தொடுத்தப்

பல்லான் கோவல் படலை சூட்டக்

கல்லாயினையே கடுமால் தோன்றல்

..............................................

முனைக்கு வரம்பாகிய வென்வேனெடுந்தகை

நடுகற் பிறங்கிய அவலிடு பறந்தலை"

என்ற மேற்கண்ட அடிகள் போரில் இறந்தவர்களுக்கு நடுகல் எழுப்பினார்கள் என்பது அறியமுடிகின்றது. அவ்வாறு எழுப்பிய நடுகற்களைச் சுற்றி அரண்போல வேலும் கேடயங்களும் அமைத்தார்கள் என்பதை,

"கிடுகு நிரைத் தெ:குன்றி

நடுகல்லரன் போல"

என்ற மேற்கண்ட வரிகள் போரில் இறந்தவர்களுக்கு எழுப்பப்பட்ட நடுகல் வழிபாட்டிடத்தினைச் சுற்றி வேலும் கேடயத்தாலும் அரண்போல அமைத்ததை அறியமுடிகின்றது. அதுபோன்றே ஆநிரை மீட்கச் சென்று மடிந்தவரின் வீரத்தினைப் போற்றுமாறும் நடுகல் எழுப்பி வணங்கியுள்ளனர் என்பதை,

"முன்னார் பூசலிற் தோன்றித் தல்லூர் நெடுநிரை

தழிஇய மீளியாளர்"

என்ற மேற்கண்ட அடிகள் ஆநிரை மீட்க மடிந்தவரின் வீரத்தினைப் போற்றியும் நடுகல்வழிபாடு இருந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது (Nagasamy, 1972).

## வடக்கிருந்தவரை சிறுதெய்வமாகிய நிகழ்வு

வடக்கிருத்தல் என்பது புறமுதுகு காட்டாமல் நேருக்கு நேர் போரிடுகையில் முதுகில் ஏற்படுகின்ற காயத்தினைப் பார்ப்பவர்கள் புறப்புண் என்று சொல்வார்கள் என்ற நாணத்தின் காரணமாக வடக்குத் திசையை நோக்கி சாகும்வரை உண்ணாநோன்பு இருந்து உயிர் விடுதலாகும். இச்செயல் வீரத்தின் அடையாளமாகப் பார்க்கப்படும் மரபு அக்காலத்தில் இருந்தது. எனவே அவ்வாறு வடக்கிருந்து உயிர்விட்டவரின் வீரத்தின் அடையாளமான மான உணர்வினை கருதி அவருக்கும் நடுகல் எழுப்பி வழிபட்டனர் என்பதை,

"களியியல் யானைக் கரிகால் வளவ

சென்றமர்க் கடந்தநின் ஆற்றல்தோன்ற

...................................

புறப்புன் நானி வடக்கிருந்தோனே"

என்ற மேற்கண்ட அடிகள் வடக்கிருந்தாருக்கு எழுப்பிய நடுகல் பற்றி அறியமுடிகின்றது. அவ்வாறு எழுப்பிய நடுகல்லையும் பின்னாலில் வழிபடும் முறை வந்ததாக அறியமுடிகின்றது.

## அரசனை சிறு தெய்வமாக வணங்கும் முறை

நடுகல் வளர்ச்சியின் விளைவாகவே அரசனுக்குக் கோயில் எழுப்பியதை அறியமுடிகின்றது. அதாவது அரசனின் நினைவாக அவர் சமாதியையே கோயிலாக்கி வழிபடுவதாகும். இவ்வழிபாட்டினை பள்ளிப் படைக் கோயில் என்று கூறுவர். இராதித்தன் விசய கம்பவர்மன் தன் தந்தை இறந்த இடத்தினை கோயிலாக்கி வணங்கியுள்ளான் என்பதை,

"தன் அப்பனார் பள்ளிப்படுத்த இடத்து ஈசராயவயமும் அதிதகரமும் எடுப்பித்துக் கண்டு செய்வித்தான்" என்ற கல்வெட்டு அடிகளால் அரசனுக்குச் சமாதி எழுப்பியதையும் அதனை கோயிலாக்கி வணங்கிய நிகழ்வையும் அறிந்துணர முடிகின்றது (Velipillai, 1969; Velipillai, 1969).

## பத்தினிப்பெண் (சதிமாதா) சிறுதெய்வமாக்கிய நிலை

பொதுவாக பத்தினிகளுக்கு தெய்மாக்கிய நிலை என்பது அன்றைய காலத்தில் கடைபிடிக்கப்பட்ட உடன்கட்டை ஏறுகின்ற வழக்கத்தில் இருந்தே வந்தது என்றே கூறலாம். அதாவது

கணவன் இறந்தவுடன் அவர் பத்தினிப் பெண்ணானவள் கணவனுடன் சேர்த்து எரிக்கப்படுவர். அவ்வாறு இறந்த பத்தினிப் பெண்களுக்கு நடுகல் வைத்து வணங்கும்முறை பண்டைய தமிழகத்தில் நிலவியிருந்தது. புறநானூற்றில் 240 பாடலில் ஆய்ஆண்டிரன் உயிர் இறந்து எரிக்கப்படும் தீயில் அவரது உரிமை மகளிரும் உடன் சென்று உயிர்விட்டது சுட்டப்படுவதை அறியமுடிகின்றது. அவ்வாறே, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் இறந்தவுடன் அவன் உடல் சுடுகாட்டில் எரிக்கப்பட்டது. அவன் மனைவி பெருங்கோப்பெண்டு தானும் தீயில் இறங்கத் துணிந்தால் என்ற செய்தி இருக்கிறது. இந்நிகழ்வு அச்சமூகத்தில் இருந்த உடன்கட்டை ஏறும் வழக்கத்தை தான் கூறுகிறது. அதாவது பெண்கள் சுடுகாடுவரை அழைக்கப்படுவதில்லை. அப்படி அழைத்தாள் அக்காலத்தில் உடன்கட்டை ஏறுவதற்காகவே இருந்திருக்கவேண்டும் என்பது ஊகித்து அறியலாம். கொழுமத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று “தீ பாஞ்சம்மன் கானி” (கொழுமம் கல்வெட்டுகள், கோவை) என்ற செய்தியைக் காட்டுகிறது. இக்கல்வெட்டு கணவனுடன் உயிர்விட்ட பெண்ணைத் தெய்வமாக வணங்குவதை அறிய உதவும் சான்றாக உள்ளது. பின்னாலில் பத்தினி தெய்வமாக கண்ணகிக்கு கோயில் எடுத்தவை கூட இந்த நடுகல் வளர்ச்சி என்றே கூறலாம்.

## முடிவுரை

சிறுதெய்வங்கள் பெருந்தெய்வங்கள் என்ற வேறுபாடு சங்க இலக்கியத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. இருப்பினும் இன்றைய வரையறையைப் பொருந்திப் பார்ப்பதாக உள்ளது. பொதுவாக இறந்தவர்களுக்கு நடுகல் வைப்பது மரபாக இருந்த சமூகத்தில் குறிப்பிட்ட நடுகற்களே வழிபாடாக மாறியது. அவ்வாறு மாறிய வழிபாட்டில் போரில் இறந்தவர், வடக்கிருந்து உயிர் நீத்தவர், பத்தினிப்பெண் உயிர்மாத்தவர், அரசனாக உயிர்த்தவருக்கு எழுப்பிய கோயில் என்ற நான்கை மட்டுமே சிறுபார்வையாக சிறுதெய்வ வழிபாட்டு நெறி என்று பண்டைய தமிழர்களின் முதல் வழிபாட்டு முறையாக இருந்த நடுகல் வழிபாட்டையும் அதனைச் சார்ந்து உருவான சிறுதெய்வ வழிபாடுகள் குறித்து இக்கட்டுரை கூறுகிறது.

## References


Agananooru, (1971) South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunalveli, India

Maraimalaiadigal, (1965) Religion of Tamil, South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunalveli, India

Nagasamy, R., (1972) Herostone, Tamilnadu government archeology, India

Sami, P.L., (1976) Mother Deity Worship in Tamil, new century book house, Chennai, India

Tholkappiyam, (1969) South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunalveli, India

Velipillai, (1969) Time and opinion in literature, Chennai, India



**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License